

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தமிழ்நாட்டில் கட்டி முடிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை சென்னையிலிருந்து காணொலி வாயிலாக திறந்து வைத்தார். அதில் ஒன்றான விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, செம்மார் கிராமத்தில் கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ கலந்து கொண்டு திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷேக் அப்துல் ரகுமான் மற்றும் ஒன்றிய செயலாளர் மாவட்ட கவுன்சிலர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழு பெருந்தலைவர் ஓம்சிவசக்திவேல், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# சிறப்பு பொருளாதார மண்டலங்கள் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம்!

சென்னை, ஜூலை.5-

இந்தியாவில் சிறப்பு பொருளா தார மண்டலங்களின் எண்ணிக்கையில் 18 சதவீத பங்களிப்பை வழங்கி தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது.

சிறப்பு பொருளாதார மண்டலங்கள் நாட்டில் அன்னிய நேரடி முதலீடுகள், ஏற்றுமதியை ஊக்குவிக்க சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த சிறப்பு பொருளாதார மண்டலங்களாக அறிவிக்கப்படும் பகுதிகள் பிற பகுதிகளை விட தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார விதிகளை கொண்டதாக இருக்கும்.

அந்த வகையில் இந்த பகுதிகளில் நவீன உள்கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்பம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற வசதிகள் பிரத்யேகமாக ஏற்படுத்தப்படும். வரிச் சலுகைகள், சுங்க வரி விலக்குகள் மற்றும் பிற சலுகைகளும் வழங்கப்படும்.

இதுதவிர, உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் ஏற்றுமதி சார்ந்ததொழில்களை தொடங்கவும் இந்த மண்டலங்கள் ஊக்குவிக்கின்றன. இதன் மூலம் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புகள் அதிகரிக்கிறது. நாட்டின் ஏற்றுமதி வருவாய் உயருகிறது.

தமிழ்நாடு முன்னிலை இதன்படி, இந்தியாவில் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் 280 இடங்களில் செயல்பாட்டில் உள்ளதாக ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டை பொறுத்தவரையில் சென்னை, கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட பல இடங்களில் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அந்த வகையில் தமிழகத்தில் மொத்தம் 51 இடங்களில் சிறப்பு பொருளாதார மண்ட லங்கள் செயல்பாட்டில் உள்ளன. அதாவது, இந்தியாவில் சிறப்பு பொருளாதார கொண்ட மாநிலங்களின் எண்ணிக் கையில் தமிழ்நாடு முன்னணியில் இருப்பதை காட்டுகிறது. ஒட்டு மொத்த இந்தியாவில் உள்ள பொரு ளாதார மண்டலங்களில், தமிழ்நாட் டில் உள்ள எண்ணிக்கையின் அளவை ஒப்பிடுகையில், 18.5 சதவீதத்தை கொண்டிருக்கிறது.

இந்த மண்டலங்களில் 650க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள், 560க்கும் மேற்பட்ட தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், 1300க்கும் மேற்பட்ட யூனிட்டுகள் இருக்கின்றன. இதன் வாயிலாக சுமார் 6 லட்சத்துக் கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இது தவிர, மேலும் 4 புதிய மண்டலங்களை தமிழ்

நாட்டில் தொடங்க திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. பிற மாநிலங்களின் பட்டியல்...

தமிழ்நாட்டைத் தொடர்ந்து அதற்க டுத்தபடியாக, மராட்டியம், தெலுங் கானா மாநிலங்களில் தலா 38 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் செயல்ப டுகின்றன. அதனையடுத்து கர்நாடகா

37 மண்டலங்கள்), ஆந்திரா (25 மண்ட லங்கள்), குஜராத் (21 மண்டலங்கள்), கேரளா (20 மண்ட லங்கள்), உத்தரபிரதே சம் (14 மண்டலங்கள்), அரியானா மண்டலங்கள்), மத்திய பிரதேசம் (6 மண் மண்டலங்கள்), மேற்கு வங்காளம் டலங்கள்), ஒடிசா (5 மண்டலங்கள்), பஞ் சாப் (3 மண்டலங்கள்), ராஜஸ்தான் (3) மண்டலங்கள்), சண்டிகார் (2 மண்டலங் கள்), சத்தீஷ்கார் (ஒரு மண்டலம்) ஆகிய மாநிலங்கள் வருகின்றன.




கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் மற்றும் தொகுதி பார்வையாளர், கழகக் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி ஆகியோர்கள், நேற்று முன்தினம் ஜூலை 3 வியாழக்கிழமை அன்று ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியம், கீழ்ப்பாடி ஊராட்சியில், நம் மண் மொழி மானம் காக்க, ‘ஓரணியில் தமிழ்நாடு’ எனும் திட்டத்தின் மூலம் வீடு வீடாக சென்று மக்களை நேரில் சந்தித்து கழக உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார்கள், இந்த நிகழ்வில் ஒன்றி கழக செயலாளர்கள், ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள்,தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை சிறப்பு முகாமினை நகர கழக செயலாளர் டேனியல்ராஜ் தலைமையில், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் ஸ்ரீதரன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு, துணைத் தலைவர் வைத்தியநாதன், செல்லையா, அருண்ராஜ், பாண்டியன், ஜெயந்தி மதியழகன், கலா சுந்தரமூர்த்தி, செல்வக்குமாரி ரமேஷ்பாபு, மனோபாலன், முருகவேல், ராஜேஸ்வரி சரவணன், பூம்பொழில் தினேஷ்பாபு, கிருஷ்ணகுமார், அய்யப்பன், நீதிபதி, தினேஷ், ரவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப்புரம் நகரம் 17 வது வார்டு மகாராஜபுரம் பகுதியில், பாகம் எண்: 152ல் மண் – மொழி – மானம் – காக்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். உடன் விழுப்புரம் கிழக்கு நகர கழக பொறுப்பாளர் எஸ்.வெற்றிவேல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, வார்டு செயலாளர் மணிவண்ணன், நகர்மன்ற உறுப்பினர் ஜெயந்தி மணிவண்ணன், இளைஞர் அணி சிவமுருகன், BDA நிர்வாகிகள் சக்திவேல், கதிரவன், மாணிக்கம், வார்டு பிரதிநிதிகள் VGL.முருகன், KRP.பாவாடை, வழக்கறிஞர் பாலமுருகன், அவைத் தலைவர் V.C.கணேசன், மகளிர் அணி நிர்வாகிகள் லதா முருகன், பொற்செல்வி சக்திவேல், சுபாஷிணி, அலமேலு, கோமதி, அர்ச்சனா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மேற்கு, தெற்கு ஒன்றியங்களில் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை பரப்புரையில் பங்கேற்று வீடு வீடாகச் சென்று அரசின் சாதனைகளை விளக்கி உறுப்பினர்களைச் சேர்த்தார்.

### திருப்பத்தூர் மேற்கு – தெற்கு ஒன்றியங்களில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை பரப்புரை!

## அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருப்பத்தூர், ஜூலை, 5-

கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி ‘ஓரணியில் தமிழ்நாடு’ வீட்டுக்கு வீடு பரப்புரை மேற்கொண்டு அரசின் திட்டங்களை பொது மக்களிடம் எடுத்துச் சொல்லி செயலி வாயிலாக உறுப்பினர் சேர்க்கை துவக்கிடும் வகையில் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி திருப்பத்தூர் மேற்கு மற்றும் தெற்கு ஒன்றியங்களின் BLA 2 BDA தேர்தல் பணிக்குழு கூட்டம் அ.நல்லதம்பி, எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்று ஆலோசனைகள் வழங்கப்பட்டது. அனைத்து பூத்களுக்கு உண்டான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதனை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி, நேரடியாக களத்திற்கு சென்று திருப்பத்தூர் மேற்கு ஒன்றிய மாடப்பள்ளி ஊராட்சி வாக்குச்சாவடி எண். 124,125, அனேரி ஊராட்சி வாக்குச்சாவடி எண். + ராச்சமங்கலம் ஊராட்சி வாக்குச்சாவடி எண். 149 ஆகியவற்றில் நேரடியாக கலந்து கொண்டு மக்களை சந்தித்து கழக அரசின் சாதனைகளை எடுத்து கூறினார். குறைகளை கேட்டறிந்தது டன் ஓரணியில் தமிழ்நாடு செயலி வாயிலாக கழக உறுப்பினர் சேர்க்கையை மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எம். ராஜேந்திரன் கழக நிர்வாகிகள் T.R. ஞானசேகரன், ரகு, காமராஜ், விஜயன், கார்த்திக், ஐ.டி.விங் பிரேம்குமார், ஞானவேல், S.C.விஜயகுமார், சரண்ராஜ், இளங்கோ, சங்கீதா, நாகராஜ், ரகு, ரகு, தனபால் ஒன்றிய நிர்வாகிகள் கழக முன்னோடிகள் இளைஞர்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர்.

# கொள்கைமகன் வாழ்க!



அன்னைதுர்கா ஈன்றெடுத்த
அன்புமகன் வாழ்க!
“ அன்பகத்தை” வழிநடத்தும்
அறிவுமகன் வாழ்க!
தன்னைவென்று தரணிவெல்ல
வந்தமகன் வாழ்க!
தலைவர்எங்கள் “தளபதி”யின்
கொள்கைமகன் வாழ்க!

செல்லமே, தந்தை உள்ளமே,
அன்பு வெள்ளமே நீ வாழ்க!
சிங்கமே, கலை அங்கமே,
ஒளிர் தங்கமே! நீ வாழ்க!

ஆரியத்தை வேரறுக்கும்
சேரன்இவன் வாழ்க!
அழகுதமிழ்ப் பாண்டியனாம்
மாறன்இவன் வாழ்க!
தீரம்கொண்டு களத்தில்நிற்கும்
வீரன்இவன் வாழ்க!
“ திருக்குவளைச் சோழனுக்குப்”
பேரன்இவன் வாழ்க!

தென்னனே, இளம் மன்னனே,
எழில் வண்ணனே! நீ வாழ்க!
செங்கதிர் நிகர் செல்வனே,
மனக் கள்வனே! நீ வாழ்க!

இரக்கத்தின் அருள்குணத்தின்
எல்லைஇவன் வாழ்க!
இனப்பகைவர் கனவுகளில்
தொல்லைஇவன் வாழ்க!
சிரிக்கின்ற பூஞ்சிரிப்பில்
முல்லைஇவன் வாழ்க!
“சேப்பாக்கம் தொகுதி”செல்லப்
பிள்ளைஇவன் வாழ்க!

கன்னலே, குளிர் திங்களே,
நறுந் தென்றலே! நீ வாழ்க!
கைசிவந் திடும் வள்ளலே,
உயர் செம்மலே! நீ வாழ்க!

முன்னேற்றக் கழகத்தின்
இளையநதி வாழ்க!
பொன்னேட்டு வரலாற்றின்
புதியவிதி வாழ்க!
தென்னாட்டுப் போர்ப்படையின்
இதயநிதி வாழ்க!
திராவிடத்தின் விடியல்!எங்கள்
உதயநிதி வாழ்க!

அந்தமே இலாச் சொந்தமே,
உயிர்ப் பந்தமே! நீ வாழ்க!
“அண்ணனும் பெரி யாருமே”
இரு கண்எனும் நீ வாழ்க!

அன்னைதுர்கா ஈன்றெடுத்த
அன்புமகன் வாழ்க!
“ அன்பகத்தை” வழிநடத்தும்
அறிவுமகன் வாழ்க!
தன்னைவென்று தரணிவெல்ல
வந்தமகன் வாழ்க!
தலைவர்எங்கள் “தளபதி”யின்
கொள்கைமகன் வாழ்க!

**(ஜூலை 4 கழக இளைஞரணிச் செயலாளராக, துணை முதல்வர், மதிப்பிற்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட நாள்)**



... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, முகையூர் வடக்கு ஒன்றியம், கண்டாச்சிபுரம் ஊராட்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி மண், மொழி, மானம் காக்க இணைவோம் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற புதிய உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், எஸ்.லூயிஸ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன், ஊராட்சி மன்ற தலைவர் ரவிக்குமார், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஜீவா, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் திருநாவுக்கரசு, உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA 2, BDA, கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

### தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

# புதுச்சேரி - காரைக்கால் மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி – **புதுச்சேரி – காரைக்கால்** மாநில அமைப்பாளர் ஒப்புதலோடு, தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புதுச்சேரி - காரைக்கால் மாநிலம்**

தலைவர் – எம்.எம். மாரியப்பன் 12, ஓம் சக்தி நகர், வரிச்சிக்குடி, காரைக் கால்.

துணைத் தலைவர் – டி. பரணி (எ) காளிமுத்து 8, மெயின் ரோடு, கீழநெ டுங்காடு, நெடுங்காடு, காரைக்கால்.

அமைப்பாளர் – வி. வினோத்குமார் 22, மாதா கோவில் வீதி, வடமட்டம், நெடுங்கால், காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் – 1) கிரி (எ) எஸ். வரதராசன் 18, தெற்கு தெரு, விழுதியூர், காரைக்கால். 2) ஆர். பக்கிரிசாமி 194, மெயின் ரோடு, வரிச்சிக் குடி, காரைக்கால்.

3) எம். தென்னரசு 23/பி, ஐயனார் கோவில் தெரு, திருவேட்டக்குடி, காரைக்கால். 4) எஸ். ரவிந்திரன் 62, மெயின் ரோடு, திருவேட்டக்குடி, காரைக்கால். 5) எஸ். முத்துராமன் 20, வி.ஓ.சி. நகர், வரிச்சிக்குடி, காரைக்கால்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 03-07-2025.

**அன்னியூர் சிவா**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி